www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

## வகுப்பு 12

பதிவெண்

நேரம்: 2.30 மணி **பகுதி - I - பொதுத்தமிழ்** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:**
1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** *விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.*

### பகுதி - I

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

**ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1) பொருத்தி விடை தேர்க:

| | | | |
|---|---|---|---|
| அ) தமிழ் அழகியல் | - | 1. | பரலி.சு.நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | - | 2. | தி.சு. நடராசன் |
| இ) கிடை | - | 3. | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| ஈ) உய்யும் வழி | - | 4. | கி.ராஜநாராயணன் |

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

2) “உவா உற வந்து கூடும்
உடுபதி இரவி ஒத்தார்” - யார், யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

3) சுரதா நடத்திய கவிதை இதழ் .............
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

4) குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

5) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் .............
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

6) மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட பகுதிகள் .............
அ) வட சென்னைப் பகுதிகள் ஆ) தென் சென்னைப் பகுதிகள்
இ) மத்திய சென்னைப் பகுதிகள் ஈ) இவை மூன்றும்

7) பிழையான தொடரைக் கண்டறிக:
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

8) யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாக அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ................
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9) **"பொய்யாவானம்"** புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொற்றொடர்
இ) இடைச்சொல்தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

10) பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

11) வெண்பாவிற்குரிய ஓசை .............
அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

12) படிமம் என்பதன் பொருள் .............
அ) பொருள் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

13) 'முத்து முத்தாய்' என்பதன் இலக்கணக்குறிப்பு .............
அ) பண்புத்தொகை ஆ) அடுக்குத்தொடர்
இ) வினையெச்சம் ஈ) உருவகம்

14) 2014-இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'அஞ்ஞாடி' புதினத்தின் ஆசிரியர் .............
அ) உத்தமசோழன் ஆ) பூமணி
இ) தோப்பில் முகமது மீரான் ஈ) சாந்தா தத்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்:** **12×2=24**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:**

15) "தலையசைத்து உதறுகிறது
மீதமான சொட்டுக்களை ஈரமான மரங்கள்" - பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?

16) சினத்தை ஏன் காக்க வேண்டும்?

17) 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யாருக்கு?

18) கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:**

19) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

21) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:**

22) **பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்தெழுதுக:** களம் - கலம்

23) திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

24) வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

25) 'மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தி இருக்கிறது' - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?

26) 'பூம்பாவாய்' - **பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



27) 'விம்முகின்ற' - **உறுப்பிலக்கணம்** தருக.

28) **பேச்சுவழக்கை எழுத்து வழக்காக** மாற்றுக:
ஊட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

29) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:**
அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.
ஆ) நான் சுடுதண்ணீரில் குளித்தேன்.

30) **வல்லின மெய்களை இட்டு எழுதுக:**
அ) பாடலை பாடினான்.
ஆ) தேருக்கு சென்றான்.

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்:** **7×4=28**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:**

31) வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32) "மூன்றான காலம்போல் ஒன்று" - எவை? ஏன்?

33) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவுவேண்டுமெனக் கேட்கிறார்?

34) "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:**

35) சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36) நீங்கள் ஆசிரியர்களானால், மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37) மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

38) அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் நான்கு தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:**

**குறிப்பு:** காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண். 42-க்குப் பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39) ஏகதேச உருவக அணி **(அல்லது)** பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக:**
**(மையக்கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும்)**

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
 வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
 கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
 தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
 எங்ஙனம் வந்ததடா தம்பிவீரா.

- பாரதியார்.

41) **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை புனைக:**
செந்தமிழ் **(அல்லது)** நிலா

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



42) **தமிழாக்கம் தருக:**

அ) Learning is a treasure that will follow its owner everywere.

ஆ) A new language is a new life.

இ) If you want people to understand you, speak their language.

ஈ) Knowledge of language is the doorway to wisdom.

42) **காது கேளாதோருக்கான மாற்று வினா:**

**பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'உணவே மருந்து; மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்புச்சத்து, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

**வினாக்கள்:**

1. உடல் நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாய் அமைபவை எவை?
2. நம் முன்னோர்கள் எவ்விதம் வாழ்ந்தனர்?
3. சமச்சீர் உணவு என்பது யாது?
4. நாம் எவ்வாறு உண்ண வேண்டும்?

43) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:**

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**(அல்லது)**

சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.

## பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **3×6=18**

44) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சரதா கூறுவனவற்றை விவரிக்க.

**(அல்லது)**

'செய்ந்நன்றியறிதலே அறம்' என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

45) 'நெகிழி தவிர்த்து நெஞ்சம் நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்தியதாகக் கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

மதராசப்பட்டினத்தில் உள்ள நான்கு பகுதிகளைப் பற்றி குறிப்பு வரைக.

46) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை 'முதல்கல்' சிறுகதை வழியே விளக்குக.

**(அல்லது)**

சாலை விபத்து ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றைத் தவிர்க்கும் வழிகளையும் எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:**

47) அ) 'துன்புளது' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல். **1×4=4**

ஆ) 'சினம்' என முடியும் குறட்பா. **1×2=2**

*******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com